# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1853/49 - 2014 මාර්තු මස 14 වැනි සිකුරාදා - 2014.03.14

*1853/49 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 3/2014*

**1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு ,
2014, சனவரி 27.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்ட ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2014, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறுமாறு நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) (இதனகத்துப்பின்னர் " திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைவதற்கு எண்ணுகின்ற கமக்காரர் ஒவ்வொருவரும் –

(அ) இலங்கைப் பிரசையொருவராதல் ;

(ஆ) திட்டத்தில் இணைவதற்கு சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடையவராதல் ;

(இ) (i) சொந்தக்காரராக அல்லது குத்தகைபெறுநராக, வாடகைப் பயிர்ச் செய்கையாளராக, அல்லது அத்துடன் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அல்லது (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் அல்லது (460 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் கமக்காரராக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள ஆளொருவராதல் வேண்டும் ; அல்லது

(ii) காசாக அல்லது பொருளாக ஊதியமளிக்கப்பட்டவரான (i) ஆம் உப பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் ஊழியராகவுள்ள ; அத்துடன்

(ஈ) இலங்கையில் இயக்கப்படாத ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அல்லது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின்கீழ் பயனாளி ஒருவராகவிருத்தல் வேண்டும்.

3. (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒழுங்குவிதி 2 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளை வைத்திருக்கின்றவரான எவரேனும் கமக்காரர் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி ச் சபைக்கு அதன் சார்பில் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். சபையானது அத்தகைய நோக்கத்துக்காக படிவத்தை குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய படிவமானது திட்டத்துக்கு விண்ணப்பதாரர்களுக்கு உறுப்பாண்மை வழங்குவதை அத்தாட்சிப்படுத்துவதற்கு சபையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருடன் கிடைக்கப்பெறச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மீது, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அதனகத்துள் குறிப்பிடப்பட்ட விபரங்களின் தன்மையை வசதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரருக்கு திட்டத்தின் உறுப்பாண்மையை வழங்குவதை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் விண்ணப்பத்தை நுனித்தாராய்தல் வேண்டுமென்பதுடன் அதன்கண் அவருடைய சான்றிதழுடன் சேர்த்து சபைக்கு அதனை அனுப்புதல் வேண்டும்.

4. (1) எவரேனும் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை சபையானது ஒரு தடவை அங்கீகரிப்பின் அவர் திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துநராக வருவதுடன் (இதனகத்துப்பின்னர் "உதவு தொகை செலுத்துநர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) சபையானது அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கு கொள்கையொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 3 இன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு சபையானது தீர்மானிக்குமிடத்து, அத்தகைய முடிபானது அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அதன் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

5. (1) எவரேனும் உதவுதொகை செலுத்துநரொருவரின் கொள்கையானது பின்வரும் எவரேனும் காரணங்களுக்காக சபையால் முடிவுறுத்தப்படலாம் :-

(அ) ஒழுங்குவிதி 3 இன் கீழ் ஆக்கப்பட்ட அவருடைய விண்ணப்பத்தில் அத்தகைய செலுத்துநரினால் கூறப்பட்ட தகவல், ஏதேனும் முக்கிய விவரங்களில் பொய்யானதாக அல்லது பிழையானதாக அல்லது அதன்கண் கூறப்பட்ட எதுவும் உண்மையாக கூறப்படவில்லை அல்லது முக்கியமான ஏதேனும் தகவல் மறைக்கப்பட்டிருக்கின்றது எனக் காணப்படின்;

(ஆ) திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துநரொருவராக தொடர்ந்திருப்பதற்கு அவரை தகுதியுடையவராக்கும் தகைமைகளை அத்தகைய உதவு தொகை செலுத்துநர் கொண்டிராதிருப்பின் ;

(இ) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி அல்லது அவருக்கு வழங்கப்பட்ட கொள்கையின்படி அல்லது அதன் கொடுப்பனவுக்காக அவருக்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் மேலதிக காலப்பகுதியினுள் அவரிடமிருந்து வருமதியான உதவு தொகைகளை செலுத்தத் தவறுவாராயின்.

(2)ஒராம் பந்தியின் கீழ் கொள்கையை சபையானது முடிவுறுத்துமிடத்து இயைபான உதவு தொகை செலுத்துநரொருவரினால் உதவு தொகைகளாக செலுத்தப்பட்ட எல்லாப் பணமும் பூட்கை அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அத்தகைய உதவு தொகை செலுத்துநருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்துக்கமைய சபையின் ஆதனமாக வருதலும் வேண்டும்.

6. (1) இதற்கான அட்டவணை அ என்பதன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வயதில் திட்டத்தில் சேருகின்ற உதவுத்தொகை செலுத்துநரொருவர் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றாகவுள்ள தொகையை செலுத்துதல் வேண்டும் :-

(அ) அவ்வட்டவணையின் நிரல் II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட திரண்ட பணத்தொகை ; அல்லது

(ஆ) அவ்வட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகையின் மாதாந்த தவணைக் கொடுப்பனவு ; அல்லது

(இ) அவ்வட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகையின் அரையாண்டு தவணைக் கொடுப்பனவு.

(2) ஒராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான உதவுதொகைகளைச் செலுத்துகின்றவாறான உதவு தொகை செலுத்துநரொருவர் அவ்வட்டவணையின் நேரொத்த பதிவின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வயதை எய்துகின்றதன் மீது மாதாந்தக் கொடுப்பனவாக அட்டவணை ஆ வின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதியத் தொகையொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

7. (1) உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவரும் அவருக்கு வழங்கப்பட்ட கொள்கையில் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

ஆயின், சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான அருட்காலப்பகுதியொன்று ஏதேனும் அத்தகைய தவணைக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு வழங்கப்படலாம் :-

(2) உதவு தொகை செலுத்துநரொருவரால் செலுத்தப்படற்பாலதான தவணைக் கொடுப்பனவொன்று அருட்காலப் பகுதியினுள் செலுத்தப்படுமிடத்து, அவருக்கு வருமதியான ஓய்வூதியத்துக்கு சீராக்கம் எதுவும் செய்யப்படுதலாகாது.

(3) உதவுத்தொகை செலுத்துநரொருவர் அருட் காலப்பகுதியின் முடிவின் பின்னரான தவணைக் கொடுப்பனவொன்றை செலுத்துமிடத்து, அத்தகைய தவணைக் கொடுப்பனவானது தவணை தவறியதாக கருதப்படுவதுடன் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நிவாரணமொன்று தவிர்ந்து கொடுப்பனவு எதுவும் அத்தகைய உதவு தொகை செலுத்துநரொருவருக்கு செய்யப்படுதல் ஆகாது.

(4) உதவு தொகை செலுத்துநரொருவர் அத்தகைய தவணைக் கொடுப்பனவுகள் வருமதியாக வருகின்ற திகதிக்கு முன்னர் அவ்வெண்ணிக்கையிலான எவையேனும் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தலாம்.

8. (1) எவரேனும் உதவு தொகை செலுத்துநரொருவரின் கொள்கையானது, இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான அவரிடமிருந்தான உதவு தொகைகளின் அடுத்தடுத்து வரும் ஐந்து தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவர் தவறுமிடத்து செல்லுபடியற்றதாகவரும்.

(2) அத்தகைய உதவுத்தொகை செலுத்துநரொருவரின் கொள்கையானது மீள செல்லுபடியானதாக்கப்படுதலாகாது. ஆனால் அவர் ஒழுங்குவிதி 9 இன் ஏற்பாடுகளுக்கமைய பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(அ) அவரால் செய்யப்பட்ட மொத்த உதவு தொகையின் மீளளிப்பு ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வலுக் குறைவோருக்கான திரண்ட தொகை பணிக்கொடை ;

(இ) அவருடைய இறப்பின் மீது அவருடைய சட்ட மரபுரிமையாளருக்கு செலுத்தப்படும் இவ்வொழுங்குவிதிகள் ஒழுங்குவிதி இறப்பு பணிக்கொடை.

9. (1) திட்டத்தின் கீழ் உதவுதொகைகளின் கொடுப்பனவின் முழுக் காலப்பகுதிக்காக வருமதியாகவுள்ள ஒழுங்குவிதி 6 இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எல்லா தவணைக் கொடுப்பனவுகளையும் முழுமையாகச் செலுத்தியுள்ள அல்லது திரண்ட தொகையொன்றைச் செலுத்துவதன் மூலம் திட்டத்தில் சேர்ந்துள்ள உதவு தொகை செலுத்துநரொருவர் அறுபது (60) ஆண்டு வயதை எய்தியதன் மீது இவ்வொழுங்குவிதிகளுக்கு அட்டவணை ஆ வின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(2) திட்டத்தின் கீழ் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு தகமையுடையவராக வந்த பின்னர் ஆனால் திட்டத்தின் கீழ் ஏதேனும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வற்கு முன்னர், உதவு தொகை செலுத்துநரொருவர் இறக்குமிடத்து, அத்தகைய உதவு தொகை செலுத்துநரின் சட்ட மரபுரிமையாளர்களுக்கு உதவுத்தொகை செலுத்துநரொருவரின் இறப்பின் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றினுள் அரசாங்க மானியம் கழிக்கின்ற உதவு தொகைகளாக உதவு தொகை செலுத்துநரொருவரால் செலுத்தப்படும் மொத்த தொகையின் கொடுப்பனவுக்காக மட்டும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(3) இதற்கான அட்டவணை அ வின் கீழ் அல்லது அவருக்கு வழங்கப்பட்ட கொள்கையின் நியதிகளின்படி அவரிடமிருந்து வருமதியான மொத்த உதவு தொகைகளில் இருந்து இருபத்தைந்து (25%) க்கு குறைவாக செலுத்தியுள்ள உதவு தொகை செலுத்துநரொருவர் ஓய்வூதியமொன்றை பெற்றுக்கொள்வதற்கு அல்லது இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அவருக்கு செலுத்தப்பட்ட உதவு தொகைகளின் மீளளிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக்கப்படுதல் ஆகாது.

(4) இதற்கான அட்டவணை அ வின் கீழ் அல்லது அவருக்கு வழங்கப்பட்ட கொள்கையின் நியதிகளின்படி அவரிடமிருந்து வருமதியான உதவு தொகைகளின் மொத்தத் தொகைக்கு குறைவாக செலுத்தியுள்ள ஆனால் அவரிடமிருந்து வருமதியான உதவு தொகைகளின் அத்தகைய மொத்த தொகையின் இருபத்தைந்து சதவீதம் (25%) அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை செலுத்தியுள்ள எவரேனும் உதவு தொகை செலுத்துநர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அதன் வட்டியுடன் சேர்த்து அவரினால் செய்யப்பட்ட உதவு தொகைகளின் மொத்தத் தொகையின் மீளளிப்பு ஒன்றிற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(5) 5 (ஆ) என்னும் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி எந்த உதவு தொகை செலுத்துநரின் கொள்கை முடிவுறுத்தப்பட்டுள்ளதோ அந்த உதவு தொகை செலுத்துநர் அத்தகைய முடிவுறுத்தலின் பின்னர் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான வட்டியுடன் சேர்த்து அவரால் செய்யப்பட்ட உதவு தொகைகளின் மொத்தத் தொகையின் மீளளிப்பு ஒன்றிற்கு உரித்துடையாவராதல் வேண்டும்.

*(6) எவ் உதவு தொகை செலுத்துநரின் கொள்கை முடிவுறுத்தப்பட்டுள்ளதோ அந்த உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவரும் 5 (அ) என்னும் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட காரணமொன்றின் விளைவாக உதவுத்தொகை செலுத்துநரொருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிந்துள்ளவர்கள் தவிர்ந்த 2 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க புதிய உறுப்பினரொருவராக திட்டத்தில் சேர்வதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.*

*10. (1) திட்டத்துக்கான உதவு தொகை செலுத்துநரொருவர் திட்டத்துக்கான ஏதேனும் மேலதிக உதவுத்தொகை செலுத்துதலன்றி வலுக்குறைவு மற்றும் இறப்பு பணிக்கொடைகான திரண்ட தொகைப் பணிக்கொடைக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.*

*(2) ஒழுங்குவிதி 3 இல் குறித்துரைக்கப்பட்டவாறான திட்டத்தில் இணைந்த உதவு தொகை செலுத்துநரொருவர் இறக்குமிடத்து அல்லது அரைகுறையாக அல்லது பூரணமாக நிரந்தரமாக வலுக்குறைவோருவராக வருமிடத்து திட்டத்தின் கீழ் ஓய்வூதியத்தை பெறுவதற்கு தகைமையுடையவராக வருமுன்னர் அவர் பின்வருவனவற்று உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும் :-*

*(அ) அவ்வட்டவணையின் நேரொத்த பதிவின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட திரண்ட தொகை பணிக்கொடையின் கொடுப்பனவுக்காக இதற்கான அட்டவணை இ என்பதன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வயதில் நிகழ்ந்த நிரந்தரமாகவும் பூரணமாகவும் வலுக்குறைந்தவராகும் சந்தர்ப்பத்தில் ;*

*(ஆ) இவ்வட்டவணையின் நேரொத்த பதிவின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட திரண்ட தொகை பணிக்கொடையின் கொடுப்பனவுக்காக இதற்கான அட்டவணை இ என்பதன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வயதில் இடம்பெற்ற நிரந்தர பகுதியளவிலான வலுக்குறைந்தவரொருவராகும் சந்தர்ப்பத்தில் ;*

*(இ) அவ்வட்டவணையின் நேரொத்த பதிவின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட இறப்பு பணிக்கொடை அவருடைய சட்ட மரபுரிமையாளர்களுக்கு கொடுப்பனவுக்காக இதற்கான அட்டவணை இ என்பதன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வயதில் உதவு தொகை செலுத்துநரொருவரின் இறப்பின் சந்தர்ப்பத்தில்.*

*(3) இரண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட திரண்ட தொகை பணிக்கொடையானது உதவு தொகை செலுத்துநரொருவரின் ஆயுட்காலமொன்றில் ஒரு தடவை மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் வலுக்குறைவானது பின்வரும் நிகழ்வுகளின் ஏதேனும் ஒன்றின் விளைவொன்றாக இருக்கப்படுதல் வேண்டும் :-*

*(அ) ஒழுங்குவிதி 3 இன் கீழ் உதவு தொகை செலுத்துநரொருவருக்கு வழங்கப்பட்ட கொள்கையின் திகதியின் பின்னர் இடம்பெற்ற வெளியக மற்றும் புலப்படக்கூடிய வன்முறை மூலம் விளைவிக்கப்பட்ட விபத்தொன்று மற்றும் அத்தகைய விபத்தின் திகதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் இடம்பெற்ற வலுக்குறைவாகவிருக்குமிடத்து ;*

*(ஆ) ஒழுங்குவிதி 3 இன் கீழ் உதவுத்தொகை செலுத்துநரொருவருக்கு வழங்கப்பட்ட கொள்கையின் திகதியின் பின்னர் இடம்பெற்ற சுகவீனமொன்று.*

*(4) உதவுத்தொகை செலுத்துநர் ஒழுங்குவிதி 3 இன் கீழ் கொள்கை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்த பின்னர் மட்டுமே திரண்ட தொகை பணிக்கொடைக்காக கோருவதற்கு தகைமையுடையவராதல் வருதல் வேண்டும்.*

*(5) நிரந்தரமான அரைகுறையாகவும் அல்லது பூரணமாக வலுக்குறைவாகப் பீடிக்கப்பட்ட எவரேனும் உதவு தொகை செலுத்துநர் அத்தகைய உதவு தொகை செலுத்துநரினால் திரண்ட தொகை பணிக்கொடையின் முழுத் தொகைகளையும் மற்றும் அதன்கண் சபையால் தீர்மானிக்கப்பட்ட வட்டியுடன் சேர்த்து செலுத்தப்பட்ட உதவு தொகையின் மொத்த தொகையும் பெற்றுக்கொள்வதற்கு தகமையுடைவராதல் வேண்டும்.*

*(6) ஐந்தாம் பந்தியின் கீழான திரண்டதொகை பணிக்கொடையை பெற்றுக்கொள்ளுகின்ற எவரேனும் உதவு தொகை செலுத்துநர் அத்தகைய நன்மையின் பெறுகை மீதான திட்டத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.*

*(7) இரண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட திரண்ட தொகை பணிக்கொடையானது பின்வருவனவற்றின் எவையேனும் ஒன்றின் நேரடியொன்றாக அல்லது நேரடியாகவல்லாத உதவு தொகை செலுத்துநரொருவர் இறப்பின் இருப்பின் செலுத்தப்படுதலாகாது:-*

*(அ) வெளிநாட்டு அரசொன்றால் யுத்தமொன்று, படையெடுப்பு அல்லது தீய செயலொன்று, பகைவரின் செயலொன்று, சிவில் யுத்தமொன்று, புரட்சி, கலகமொன்று, புரட்சிப்போர் அல்லது யுத்தம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது அல்லது வெளிப்படுத்தப்பட்டாலன்றி என்ற வகையை பொருட்படுத்தாத வகையிலான கிளர்ச்சி ;*

*(ஆ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட வானூர்த்தி அல்லது வாடகைக்கமர்த்தப்பட்ட விமானத்தின் வானூர்திக கட்டணம் செலுத்திய பின்னர் அதில் வான் பயணம் செய்கின்ற பயணியொருவராகவல்லாத பயணம் ;*

*(இ) ஒழுங்குவிதி 3 இன் கீழ் உதவு தொகை செலுத்துநருக்கு வழங்கப்பட்ட கொள்கை திகதியிலிருந்தான இரண்டு ஆண்டு காலப்பகுதியினுள் பித்துப் பிடித்த நிலையில் அல்லது பித்துப் பிடிக்காத நிலையில் தற்கொலை செய்தல் ;*

*(ஈ) மதுசாரம் அல்லது போதைப் பொருட்களின் செல்வாக்கின் கீழ் புரியப்பட்ட உதவுத்தொகை செலுத்துநரொருவரின் செயலொன்று ;*

*(உ) உதவு தொகை செலுத்துநரொருவரான சட்ட முரணான செயலை புரியும் போது அதாவது அத்தகைய ஏதேனும் செயலை புரிந்தமைக்காக சட்ட அதிகாரிகளின் கட்டுக்காப்பில் இருக்கும் போது.*

*(8) இறந்த உதவு தொகை செலுத்துநரொருவரின் சட்ட மரபுருமையாளர் விபத்தொன்றின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட உதவு தொகை செலுத்துநரொருவரின் இறப்பு தவிர்ந்ததாக இருக்குமிடத்து, ஒழுங்குவிதி 3 இன் கீழ் கொள்கை வெளியீட்டு திகதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்ததன் பின்னர் மட்டும் இறப்பு பணிக்கொடையைக் கோருவதற்கு தகமையுடையவராகவருவார்.*

*(9) இறந்த உதவு தொகை செலுத்துநரொருவரின் சட்ட மரபுரிமையாளர் இறப்புப் பணிக்கொடைக்கு மேலதிகமாக சபையால் தீர்மானிக்கப்பட்ட அதன் வட்டியுடன் சேர்த்து இறந்த உதவு தொகை செலுத்துநரொருவரால் செலுத்தப்பட்ட உதவு தொகையின் மொத்த தொகையையும் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.*

*(10) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இறப்புப் பணிக்கொடையானது பின்வருவனவற்றின் எவையேனும் ஒன்றின் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் உதவு தொகை செலுத்துநரொருவர் இறப்பின் செலுத்தப்படுதலாகாது.*

*(அ) வெளிநாட்டு அரசொன்றால் யுத்தமொன்று, படையெடுப்பு அல்லது தீய செயலொன்று, பகைவரின் செயலொன்று, சிவில் யுத்தமொன்று, புரட்சி, கலகமொன்று, புரட்சிப்போர் அல்லது யுத்தம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது அல்லது வெளிப்படுத்தப்பட்டாலன்றி என்ற வகையை பொருட்படுத்தாத வகையான கிளர்ச்சி ;*

*(ஆ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட வானூர்த்தி அல்லது வாடகைக்கமர்த்தப்பட்ட விமானத்தின் வானூர்த்திக் கட்டணம் செலுத்திய பின்னர் அதில் வான் பயணம் செய்கின்ற பயணியொருவராகவல்லாத பயணம் ;*

*(இ) ஒழுங்குவிதி 3 இன் கீழ் உதவுத்தொகை செலுத்துநருக்கு வழங்கப்பட்ட கொள்கை திகதியிலிருந்தான இரண்டு ஆண்டு காலப்பகுதியினுள் பித்துப் பிடித்த நிலையில் அல்லது பித்துப் பிடிக்காத நிலையில் தற்கொலை செய்தல் ;*

*11. (1) (அ) சபையின் முடிவால் கொள்கை முடிவுறுத்தல் ;*

*(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஆக்கப்பட்ட சபையின் ஏதேனும் முடிபு.*

*என்பவற்றால் பாதிக்கப்பட்ட எவரேனும் உதவு தொகை செலுத்துநர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிபு கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களினுள் மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.*

*(2) சபையானது, (1) ஆம் பந்தியின் நோக்கத்துக்காக படிவத்தில் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன் சபையால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.*

*12. (1) 1987, மே 7 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்ட நலன்புரி ஒழுங்குவிதிகளின் கீழ் விதித்துரைக்கப்பட்ட முறையில் திட்டத்தில் இணைந்துள்ள எவரேனும் உதவு தொகை செலுத்துநர், இவ்வொழுங்குவிதிகளின் நடைமுறைத் திகதியிலிருந்து பயனுறுவதாக இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைந்தவராதல் வேண்டுமென்பதுடன் திட்டத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.*

*(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2014, சனவரி 1 ஆந் திகதியில் உள்ளவாறு ஐம்பத்தைந்து வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவராகவுள்ளவரும் ஆனால் அறுபது வயதுக்கு குறைவானவராகவுள்ளவரும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் உதவு தொகை செலுத்துநரொருவரால் அவ்வட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட அவரது வயதுக்கு இயைபானவாறாக செலுத்தப்படுவதற்கு இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை அ வின் நிரல்* II, III, IV *இல் குறித்துரைக்கப்பட்டவாறு உதவுத்தொகை செலுத்துநரினால் ஏற்கனவே செலுத்தப்பட்ட உதவுத்தொகைகளை கழிக்கப்படுவதன் மூலம் திருத்தப்படுதல் வேண்டும்.*

*(3) இவ்வொழுங்குவிதிகளின் நடைமுறைத் திகதியிலிருந்த பயனுறுகின்ற திட்டத்திலிருந்து வெளியேற விரும்புகின்ற இரண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் உதவு தொகை செலுத்துநர் சபையால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய தொகை மீதான அக்கறையுடன் சேர்த்து இவ்வொழுங்குவிதிகளின் நடைமுறைத் திகதிக்கு முன்னர் அவரால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளின் மொத்த தொகையை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.*

*(4) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2014, சனவரி 1 ஆந் திகதியில் உள்ளவாறு ஐம்பத்தைந்து வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவாறாகவுள்ளவரும் ஆனால் அறுபது வயதுக்கு குறைவானவாகவுள்ளவரும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் உதவு தொகை செலுத்துநரொருவரால் அவ்வட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட அவரது வயதுக்கு இயைபானவாறாக செலுத்தப்படுவதற்கு இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை அ வின் நிரல்* II, III, IV *இல் குறித்துரைக்கப்பட்டவாறு உதவு தொகை ஐம்பது சதவீத கழிக்கப்படுதல் வேண்டும்.*

(5) இவ்வொழுங்குவிதிகளின் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து பயனுறும் வகையில் திட்டத்திலிருந்து வெளியேற விரும்புகின்ற (4) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் உதவுத்தொகை செலுத்துநர் அதன் அக்கறையுடன் சேர்த்து இவ்வொழுங்குவிதியின் நடைமுறைத் திகதிக்கு முன்னர் அவரால் செலுத்தப்பட்ட உதவுத்தொகைகளின் மொத்தத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு அறுபது வயதைப் பூர்த்தி செய்வதன் மீது உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(6) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவரால் செலுத்தப்படற்பாலதான உதவு தொயின் தொகை மற்றவற்றுக்கிடையில் மற்றும் அத்தகைய கொடுப்பனவுகளை உரிய திகதியையும் விதிக்கின்ற இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கொள்கையொன்று வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உதவுதொகை செலுத்துநர் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை ஆ வில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதிய நன்மைகளுக்காக உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

13. (1) 1987, மே 7 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்ட முறையில் திட்டத்தில் இணைந்துள்ளவரும் 2014, சனவரி 1 ஆந் திகதியில் அறுபது வயதை அல்லது அதற்கு மேல் எய்தியுள்ளவருமான எவரேனும் உதவு தொகை செலுத்துநர் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வகையில் ஓய்வூதிய நன்மைகள் முனையப்படுதல் வேண்டும். அவரால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின் மொத்த தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(2) அறுபது வயதை எய்த முன்னர் ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உதவுத்தொகை செலுத்துநர் ஒருவரால் உதவுத்தொகை நிலுவைகள் செலுத்தப்படுவதற்கு இருக்குமிடத்து இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செலுத்தப்படற்பாலனவான ஓய்வூதிய நன்மைகள் 1987, மே 7 ஆந் திகதிய 422/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்ட முறையில் இயைபான உதவுத்தொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளின் தொகைக்கும் அவரது வயதுக்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின் அத்தகைய உதவுத்தொகை செலுத்துநரால் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகைக்கும் செலுத்தப்பட்டுள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(அ) 2012, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்றதும், 2013, திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக உதவு தொகை செலுத்துநரொருவருக்கு செலுத்தப்படற்பாலதான ஓய்வூதிய நன்மைகளின் நிலுவைகள் இருக்குமிடத்து எஞ்சியுள்ள தொகை இவ்வொழுங்குவிதிகளின் கீழ் உதவு தொகைகளாக உதவு தொகை செலுத்துநரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நிலுவைகளின் தொகையை எதிரீடு செய்து செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான உதவு தொகை செலுத்துநருக்கு செலுத்தப்படற்பாலதான ஓய்வூதிய நன்மைகள் உதவு தொகை நிலுவைகளின் தொகையை விட குறைவாக இருக்குமிடத்து, அத்தகைய நிலுவைகளின் மூன்றிலொரு பங்கு தொகையொன்று மட்டும் ஒவ்வொரு மாதத்திலும் ஐம்பது ரூபா தொகையாக கழிப்பனவு செய்வதன் மூலம் உதவு தொகை செலுத்துநருக்கு செலுத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்யப்படுதல் வேண்டும்.

14. 1987, மே 07 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் கீழ் உதவு தொகைகளாக திரண்ட தொகையொன்று செலுத்துகின்ற எவரேனும் உதவு தொகை திரண்ட தொகையாக அவரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட உதவு தொகைளின் தொகைக்கும் அவருடைய வயதுக்கு இயைபானதான இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட அத்தகைய உதவு தொகை செலுத்துநரொருவரால் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகைகளின் தொகைக்குமிடையிலான ஏதேனும் வேறுபாட்டின் கொடுப்பனவின் பின்னர் மட்டுமே இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஓய்வூதிய நன்மைகளுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

15. காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறான 1987, மே 7 ஆந் திகதிய 452/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்ட ஒழுங்குவிதிகளின் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எவ்வற்றுக்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

16. இவ்வொழுங்குவிதிகள்,

"சட்டம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரி திட்டச் சட்டம் எனப் பொருள்படும்.

"கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை" என்பது, 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை எனப் பொருள்படும்.

"சட்ட மரபுரிமையாளர்" என்பது- உதவுத்தொகை செலுத்துநரொருவரின் உயிர் வாழ்கின்ற வாழ்க்கை துணை மற்றும் அத்தகைய வாழ்க்கைத் துணை இல்லாதவிடத்து சட்டத்தின் அட்டவணையில் காணப்படுகின்றதான ஒழுங்கில் முன்னுரிமையிலுள்ள அத்தகைய உதவுத்தொகை செலுத்துநரொருவரின் இரத்தவழி உறவினர்களில் ஒருவர் மட்டும்.

"நிரந்தரமான அரைகுறை வலுக்குறைந்தவர்" என்பது,

(i) ஒரு கண்பார்வை இழப்பு ;
(ii) ஒரு கை இழப்பு ;
(iii) ஒரு கால் இழப்பு.

"நிரந்தரமான பூரணமாகவும் வலுக்குறைந்தவர்" என்பது-

(i) இரண்டு கைகள் இழப்பு ;
(ii) இரண்டு கால்கள் இழப்பு ;
(iii) இரண்டு கண் பார்வை இழப்பு ;
(iv) ஒரு கை மற்றும் கால் இழப்பு ;
(v) ஒரு கால் மற்றும் ஒரு கண் பார்வை இழப்பு ;
(vi) ஒரு கை மற்றும் ஒரு கண் பார்வை இழப்பு ;
(vii) கழுத்துக்கு கீழ் பூரணமான பாரிசவாதம்.

**அட்டவணை அ**

**(ஒழுங்குவிதி 6)**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| திட்டத்துக்கு சேர்க்கப்பட்டு உடனடுத்துப் பின்வரும் அடுத்த பிறந்த நாளன் றான வயது | திரண்ட தொகை யொன்றாக உதவு தொகை | மாதாந்த உதவு தொகை (ரூபா) | அரைவாசி உதவு தொகை |
| 18 | 3628 | 27 | 160 |
| 19 | 3960 | 30 | 175 |
| 20 | 4323 | 32 | 191 |
| 21 | 4718 | 35 | 209 |
| 22 | 5149 | 39 | 229 |
| 23 | 5619 | 43 | 251 |
| 24 | 6132 | 47 | 275 |
| 25 | 6692 | 51 | 301 |
| 26 | 7302 | 56 | 330 |
| 27 | 7969 | 62 | 363 |
| 28 | 8695 | 68 | 398 |
| 29 | 9488 | 74 | 437 |
| 30 | 10353 | 82 | 481 |
| 31 | 11297 | 90 | 529 |
| 32 | 12328 | 99 | 582 |
| 33 | 13453 | 109 | 641 |
| 34 | 14682 | 120 | 707 |
| 35 | 16024 | 133 | 781 |
| 36 | 17490 | 147 | 864 |
| 37 | 19093 | 162 | 956 |
| 38 | 20846 | 180 | 1060 |
| 39 | 22763 | 200 | 1177 |
| 40 | 24860 | 222 | 1310 |
| 41 | 27155 | 248 | 1460 |
| 42 | 29668 | 277 | 1632 |
| 43 | 32421 | 311 | 1829 |
| 44 | 35439 | 349 | 2056 |
| 45 | 38749 | 394 | 2319 |
| 46 | 42380 | 446 | 2627 |
| 47 | 46369 | 508 | 2990 |
| 48 | 50755 | 581 | 3422 |
| 49 | 55580 | 670 | 3942 |
| 50 | 60893 | 778 | 4577 |
| 51 | 66749 | 912 | 5365 |
| 52 | 73210 | 1082 | 6366 |

**அட்டவணை அ** (தொடர்ச்சி)

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| திட்டத்துக்கு சேர்க்கப்பட்டு உடனடுத்துப் பின்வரும் அடுத்த பிறந்த நாளன் றான வயது | திரண்ட தொகை யொன்றாக உதவு தொகை | மாதாந்த உதவு தொகை (ரூபா) | அரைவாசி உதவு தொகை |
| 53 | 80349 | 1304 | 7671 |
| 54 | 88246 | 1603 | 9431 |
| 55 | 96991 | 2027 | 11922 |
| 56 | 106684 | 2668 | 15692 |
| 57 | 117445 | 3745 | 22023 |
| 58 | 129415 | 5911 | 34756 |
| 59 | 142756 | 12435 | 73104 |

**அட்டவணை ஆ**

(ஒழுங்குவிதி 6)

| நிரல் I | நிரல் II |
|---|---|
| ஓய்வூதிய நன்மைக்கு உரித்தாக்கப்பட்ட வயது | ஓய்வூதியத்தின் மாதக் கொடுப்பனவு (ரூபா) |
| 60 - 63 | 1,000.00 |
| 64 - 70 | 1,250.00 |
| 71 - 77 | 2,000.00 |
| 78 அல்லது அதற்குமேல் | 5,000.00 |

(ஒழுங்குவிதி 10)

**அட்டவணை இ**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| திட்டத்துக்கு சேர்க்கப்பட்டு உடனடுத்துப் பின்வரும் அடுத்த பிறந்த நாளன்றான வயது | முழுமையான நிரந்தர வலுக்குறைவு | அரைகுறையான நிரந்தர வலுக்குறைவு | இறப்பு |
| வருடங்கள் | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| 30 வயதிக்கு மேல் | 50,000 | 25,000 | 25,000 |
| 31 - 35 | 40,000 | 20,000 | 20,000 |
| 36 - 40 | 30,000 | 15,000 | 15,000 |
| 41 - 45 | 20,000 | 10,000 | 10,000 |
| 46 - 60 | 12,000 | 6,000 | 6,000 |

03 - 999

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.